# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 தை மாதம்

## “நாட்டை யார் ஆளுகிறார்கள் என்பதை விட எந்தத் தத்துவம் ஆளுகின்றது என்பதே முக்கியம்!”



“பெண்களின் இயற்கை நிலைகள், சாவு, பிறப்பு, ... முதலிய எதுவுமே தீட்டு ஆகாது, அருளுலகத்திற்கு விரோதமாகாது. பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்தான் தங்களின் பொய்யான ஹிந்துமதத்தால் இவையெல்லாம் தீட்டு என்ற மடமையை வளர்த்து விட்டார்கள். இந்த மூடநம்பிக்கைகள், கண்மூடிப் பழக்க வழக்கங்கள் மண்மூடிப் போக வேண்டும்....”

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

# உள்ளுறை

1. **“நம்மை யார் ஆளுகிறார்கள் என்பதை விட நம்மை எந்தத் தத்துவம் ஆளுகின்றது என்பதே முக்கியம்”** - திருவையாறு வட்டார பெரும்புலியூரைச் சேர்ந்த சித்தரடியான் திரு கலியமூர்த்தி அவர்களுக்கு குருதேவர் தலைமைப்-பீடத்திலிருந்து எழுதிய நெடிய விளக்க அஞ்சல்.

2. **“உயிர்ப்புச் செய்யப்பட்ட கோயிலுக்கான பூசைமுறைகள்”** - விரகாலூரைச் சேர்ந்த சித்தரடியாள் திருமதி சமுத்திரவள்ளி அவர்களுக்கு குருதேவர் எழுதிய செயல்நலம் பாராட்டுத் திருவோலை.

ஓம்

# நம்மை யார் ஆளுகிறார்கள் என்பதை விட நம்மை எந்தத் தத்துவம் ஆளுகிறது என்பதே முக்கியம்

25-7-89,
தலைமைப்பீடம்.

1) அருள்மிகு ஆதனக்கோட்டை வீரமாகாளி சன்னிதானம் சித்தரடியார் சித்தர் மகன் N.கலியமூர்த்தி (பெரும்புலியூர், திருவையாறு அஞ்சல், தஞ்சை-613204) அவர்கள் சமூகத்திற்கு,

தலைவர், தமிழின குருபீடம், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், பரபிறம்மம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அருட்கொடை வள்ளல், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள்;

வெள்ளோட்டமாக, அவசரமாக நள்ளிரவில் முதல் அஞ்சலுக்கும் (20-7-89), இரண்டாம் அஞ்சலுக்கும் (21-7-89) கூறிய பதிலின் சுருக்கத்தை தலைமைப்பீட எழுத்தாளர்களுள் ஒருவரான பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன் (M.Com.) எழுதிக் கொள்வது:

2) குருதேவரின் பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய சித்தரடியார் கலியமூர்த்தி அவர்களே! நமது பீடாதிபதி அவர்கள் கிழக்கு மண்டல ஞான உலா முடிந்து திரும்பியவுடன் தங்களைப் பற்றிய

விரிவான செய்திகளை மிகுந்த மகிழ்ச்சியோடு வெளியிட்டார். தங்களைத் தம்முடைய உறவினராகவும்; அருளுலகத்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைச் சுற்றமாகவும்; சோழமண்டலத்தை விரைவில் அருட்படையின் பாடி வீடாகவும், அருட்போரின் பாசறையாகவும் உருவாக்க வல்ல தகுதிமிக்க தமிழ்ப் புலமை பெற்ற வீரத் தளபதி என்றும் செய்தி அளவில் எங்களுக்கு அறிவிப்புக் கொடுத்தார். ஏராளமான எழுத்து மங்கிப் போய்க் கிடக்கும் கோப்புக்களை நகலெடுப்பதற்கு இந்தப் புலவர் பெருமகனுர் பயன்படுவார் என்று கூறினுர். அத்துடன் தங்களூரில் தங்களுடைய மெய்யான பொருளாதார வாய்ப்பு வசதிகளையும், மற்ற பக்குவ நிலைகளையும் ஆராய்ந்த பிறகு ஒரு பயிற்சி முகாம் உங்கள் ஊரில் நடத்தலாம் என்று கூறினுர். முடிந்தால், தங்களின் உதவித் தொகை கொண்டு தங்கள் வட்டாரத்திலோ அல்லது சென்னையில் நாங்கள் அச்சிடும் இடத்திலோ இன்றைக்கு ரூ.10/=க்கு விற்கப்படும் பூசாமொழிப் புத்தகம் முதல் பதிப்பை உடன் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்து இரண்டாம் பதிப்பாக ரூ.15/- விலையில் வெளியிடலாம் என்றும் குறிப்பிட்டார். இன்னும் பலவாறு உங்களைப் புகழ்ந்து கூறினுர். எமக்கு இதற்கு மேல் நினைவில்லை. எனவேதான், தங்களின் இரண்டு அஞ்சல்களையும், குருதேவர் நள்ளிரவில் படிக்கச் சொல்லிக் கேட்டார். தங்களுக்கு பதில் எழுதும் பொறுப்பை யாரிடம் கொடுப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது நானே முன் வந்து ஏற்றுக் கொண்டேன். இனிமேல் அனேகமாக நானே உங்களுக்கு பதிலெழுத முற்படுகிறேன். நான்தான், குருதேவருடன் அன்றுடம் கல்லூரி சென்று வருகிறேன். விரைவில் உங்களைச் சந்திக்க தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருள்புரியட்டும்.

3) ஐயா! தாங்கள், குருதேவர் ஞானஉலா வந்து திரும்பியவுடன் தலைமைப் பீடத்திலிருந்து எழுதிய அஞ்சலட்டைக்கு உடனே பதில் எழுதாததால்; உங்களுக்கு அருளுலகக் குழப்பம் ஏதேனும் ஏற்பட்டு

விட்டதா? அல்லது பொருளுலக குழப்பம் ஏதேனும் ஏற்பட்டு விட்டதா? என்ற ஐயம் குருதேவருக்கு வந்து விட்டது. அதனுல்தான் குருதேவர் தவத்தில் அமர்ந்து தாத்தாவின் (தஞ்சைக் காவிரியாற்றங்கரைக் கருவூரர்) வரலாற்றையும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை கி.பி.1772இல் தோற்றுவித்த தாத்தா கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்களின் வரலாற்றையும் எழுதி வருகிறார். இவை இரண்டும் தங்களுக்காக எழுத ஆரம்பிக்கப்பட்டது. இவையெல்லாம் கூட தங்களிடம் இருந்து உடனுக்குடன் பதில் வரவில்லை என்பதால் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து இனிமேலாவது வாரம் இருமுறை அஞ்சல் எழுதுங்கள். எந்த அஞ்சல் வந்தாலும் உடனுக்குடன் பதில் எழுதுங்கள்.

<u>**குறிப்பு:-**</u>

(a) தாங்கள் மூன்று புதிய கோப்புக்கள் (Files) வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்றில் நீங்கள் எழுதக் கூடிய அஞ்சல்களுக்குரிய இரண்டாவது நகலை (எது எழுதினுலும் கார்பன் வைத்து 1 + 1 எழுத வேண்டும். மூலத்தை குருதேவருக்கு அனுப்பிட வேண்டும்.) போட்டு வைத்துக் கொள்ளுங்கள். இப்படி நீங்கள் யாருக்கு அஞ்சல் எழுதினுலும் ஒரு நகலை தங்களுடைய கோப்பில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

(b) குருதேவரிடமிருந்து வரக்கூடிய அஞ்சல்கள் அனைத்தையும் அப்படியே தேதிப்படி கோப்பில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். உடனுக்குடன் இரவு பகலாக அமர்ந்து அஞ்சலுக்கு ஒரு பேனு நகலாவது அல்லது இரண்டு பேனு நகலாவது (தலைமைப்பீடத்திலிருந்து கேட்டபடி) எழுதி தலைமைப்பீடத்திற்கு அனுப்ப வேண்டும். அதன்பிறகு, குருதேவரின் அஞ்சலை தங்கள் வட்டாரத்திலுள்ள அனைவருக்கும் படித்துக் காட்ட வேண்டும்.

முடிந்தால் 1 + 2 = 3 கார்பன் நகல் எழுதி தென்மண்டல நிர்வாகக் குழுவிற்கும் (ச. துரைராசன், 115 புட்டுத்தோப்பு ரோடு, மதுரை - 625010), மேற்கு மண்டல நிர்வாகக் குழுவிற்கும் (இரா. வெங்கடேசன் M.A., 2/68, மெயின் ரோடு, வேம்படிதாளம், சேலம் - 637504) அனுப்பி வையுங்கள் மீதியுள்ள ஒரு நகலை முழுநேரச் செயல்வீரராகிய திருஞானசம்பந்தத்திற்கு கொடுத்து கிழக்கு மண்டலம் முழுவதுக்கும் படித்துக் காட்டக் கூறுங்கள். இப்படி குருதேவருக்கும் உங்களுக்கும் உள்ள அஞ்சல் தொடர்பை நாடு முழுவதுமுள்ள நம்மவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தி உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

(c) ஒருமுறை தலைமைப்பீடத்திற்கு நேரில் வாருங்கள் அல்லது ரூ.180/- முதல் ரூ.200/- வரை அனுப்பி தலைமைப்பீடத்திலுள்ள அச்சிடப்பட்டுள்ள அறிவிக்கைகள் (Notices), மாத மலர்கள் (Magazines), புத்தகங்கள் (Books) முதலிய அனைத்தையும் அனுப்பக் கூறி கோப்புக்களில் பாதுகாக்க வேண்டியதை கோப்பில் பாதுகாத்திடுங்கள். பைண்டிங் (Binding) செய்து பாதுகாக்க வேண்டியதை Binding செய்து பாதுகாத்திடுங்கள். நீங்களும் படியுங்கள். மற்றவர்களுக்கும் படித்திடத் தாருங்கள்.

4) நண்பரே! குருதேவரிடம் சில ஆயிரக்கணக்கான கட்டுரைகள் அச்சிடக்கூடிய தகுதியுடையனவாக உள்ளன. தங்களுடைய வீடு சோழமண்டலத்திற்கு மட்டும் பாடி வீடாக இல்லாமல் தமிழகம் முழுவதையுமே விடுவிக்கக் கூடிய அருட்படையின் பாடிவீடாக இருக்க வேண்டும். அதற்காக கூலி கொடுத்தாவது; தமிழை பிழையில்லாமல் அழகாக எழுதக் கூடியவர்களை வேலைக்கு அமர்த்தி குருதேவரிடமுள்ள கட்டுரைகளுக்கு பேனா நகல்களும், கார்பன் நகல்களும், கையெழுத்து இயந்திரப் பிறதி நகல்களும் (Cyclostyle Machine Copies) தயாரித்து குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள கட்டுரைகளைப் புத்தகங்களாக (Binding) பைண்டிங் செய்து பெரிய

பெரிய நகரங்கள் முதல் சிறிய சிறிய ஊர்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், பட்டிதொட்டிகளிலும் ஆங்காங்கே அமைக்கக் கூடிய பாடிவீடுகளில் உள்ள பாசறை வீரர்கள் படித்துப் படித்து **குருதேவரின் கருத்துக்கள் எனும் போர் ஆயுதங்களையும், கருவிகளையும், இயந்திரங்களையும்; குருதேவரின் செயல்திட்டங்கள் எனும் படை அணிவகுப்பு முறைகளையும், வியூகங்களையும்** நன்கு புரிந்து விரைவில் நாடு முழுவதுமுள்ள எல்லா பாசறைகளிலும் முழுமையாகத் தயாரிக்கப்பட்ட அருட்படை எல்லா முனைகளிலும் போரினைத் தொடங்க தயாராக இருக்கும் நிலை உருவாக்கப்பட்டேயாக வேண்டும். அதற்கு இதுதான் முறை, நெறி, விதி, சட்டம், செயல் சித்தாந்தம். இதனைப் புரிந்து செயலாக்கக் கூடிய மன உறுதியும், சிந்தைத் தெளிவும், செயல் திறமும் தங்களுடைய தமிழின மொழி மத உணர்வால்தான் தங்களுக்கு உண்டாக வேண்டும். அது பற்றி குருதேவர் சிந்திக்கிறார்! சிந்திக்கிறார்!! சிந்திக்கிறார்!!! இவை பற்றி உங்களுடைய திருத்தமான கருத்தோட்டங்களை எழுதுங்கள்.

**குறிப்பு:-**

a) குருதேவரின் அஞ்சல் வடிவக் கட்டுரைகள், அஞ்சல்கள் பல்லாயிரக் கணக்கில் கோப்புக்களில் இருக்கின்றன. அதை அப்படியே செராக்சு நகல்கள் (Xerox Copies) எடுக்கப்பட்டோ, அல்லது மேலே குறிப்பிட்ட பல்வேறு வகையில் நகல்கள் எடுக்கப்பட்டோ பொதுமக்கள் படிப்பதற்குத் தரப்பட்டால் நமது மக்கள் புதுவெள்ளம் போல் திரண்டு அருளாட்சிப் பணியில் ஈடுபட்டிடுவார்கள்.

b) நமது குருதேவர் எழுதிய நல்ல நூல்கள் நூற்றுக்கணக்கில் அச்சடிக்காமல் உள்ளன. அவை தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உலகெங்குமுள்ள தமிழர்களுக்கும், நம்மைப் போல் மானமுள்ள இன மொழி மத விடுதலை விரும்பிகள் வாழும் இந்தியாவின் பிற மாநிலத்தவர்களுக்கும், உலகெங்குமுள்ள இன

மொழி மத விடுதலை விரும்பிகளுக்கும் (The Liberators, Freedom-Fighting Tigers, Enfranchisement-liking Lions) அனுப்பி வைத்தால், நம்முடைய அருளாட்சி அமைப்புப் பணிக்கும்; அருட்படைக்கும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்திற்கும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்கும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டு முயற்சிக்கும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவ பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாய அமைப்பிற்கும் வலிமை மிக்க பேராதரவுகளும், வளம் நிறைந்த எல்லா வகைப்பட்ட ஏந்துகளும், உழுவலன்பு ஊற்றெடுக்கும் உண்மையான உதவிகளும் கார்காலத்து மழை போல் கிடைத்துக் கொண்டேயிருக்கும்! கிடைத்துக் கொண்டேயிருக்கும்!! கிடைத்துக் கொண்டேயிருக்கும்!!! அவற்றால் நாமும் பயன்மிகு வெற்றிச் சாதனைகளைப் படைத்துக் கொண்டேயிருப்போம்! படைத்துக் கொண்டேயிருப்போம்!! படைத்துக் கொண்டேயிருப்போம்!!!

இவற்றையெல்லாம் எண்ணித்தான் நண்பரே! நமது குருதேவர் நிலவொளி இருக்கும் இரவுகளிலும், கதிரொளியின் வெண்மை தெரியும் அதிகாலைப் பொழுதுகளிலும், நீலவானில் சிறகடித்துப் பறந்து, தூங்கும் மானுடர்களை தட்டி எழுப்பப் பாடும் வானம்பாடி போல்!; தொடர்ந்து இரவு பகலாக அயராமல் "**தமிழா! நீ! விழிச்சி பெறு! எழிச்சி பெறு! பயிற்சி பெறு! உனது உயர்ச்சிக்காக அயர்ச்சியின்றி முயற்சி செய்ய புறப்பட்டு வா! உயர்ச்சி மிக்க செழிச்சி நிறை வண்டமிழகத்தை விடுதலை உணர்வு மிக்க சமுதாய நாடாக மாற்றுவோம் ...**" என்று முழக்கமிட்டு வருகின்றார்! முழக்கமிட்டு வருகின்றார்!! முழக்கமிட்டு வருகின்றார்!!! ஆனால், நமது செந்தமிழரோ செத்தாரே போல் கேளாச் செவியராய் இருக்கின்றார்கள். ஐயகோ! என்ன செய்வது?! என்ன செய்வது?! என்ன செய்வது?! இச்-செத்தாருள் ஒருவராய்த்தான் தாங்களும் இருந்திடுவீரோ???!!!... என்ற ஐயத்தால்தான் தலைமைப்பீடத்தார்கள் உங்களிடமிருந்து

உடனுக்குடன் அஞ்சல் வராத காரணத்தால்; தங்களுக்குரிய பதிலை குருதேவரிடம் கேட்டு எழுதவில்லை.

ஆனால், தங்களின் இரண்டாவது அஞ்சல் தாங்கள் செத்தாருள் ஒருவரல்ல; செத்தாரையும் மாற்ற வல்ல சத்தானவர் என்ற பேருண்மையை விளக்கி விட்டது. எனவேதான், தங்களுக்கு இந்த விரிவான பதில் எழுதப்படுகிறது. இதை சிலமுறை படித்துப் பார்த்தவுடன் பிழையில்லாமல் நிறுத்தி நிதானமாக அழகாக பேனா நகல் எடுக்க முற்படுங்கள். ஒவ்வொரு நகலை எழுதி முடித்தவுடன் அதை மூலத்துடன் ஒப்பிட்டுச் சரிபார்த்துத் தலைமைப்பீடம் அனுப்புங்கள். அப்படி இரண்டு பேனா நகல்கள் அனுப்பிய பிறகு 1 + 2 = 3 கார்பன் நகல்கள் எடுத்து ஒன்றை மதுரை நிர்வாகக் குழுவிற்கும், மற்றொன்றை மேற்கு மண்டல நிர்வாகக் குழுவிற்கும், மீதமுள்ள ஒன்றை திருஞானசம்பந்தத்திற்கும் தாருங்கள். அதற்கிடையில் தங்களைப் பார்க்க வருபவர்களுக்கும், தாங்கள் சென்று பார்ப்பவர்களுக்கும் இந்த அஞ்சலை படித்துக் காட்டுங்கள்.

**<u>சிறப்புக் குறிப்பு:-</u>** இந்த அஞ்சலைத் தாங்கள் சிலமுறை நகலெடுப்பதன் மூலம்; இந்த அஞ்சலைத் தாங்கள் பல நூறு முறை படித்தது போல் மனதில் பதிந்து விடும். அப்படித் தங்கள் மனதில் குருதேவரின் அஞ்சல்கள், கட்டுரைகள் பதிய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நகல் எடுக்கும் செயல்திட்டம் தாத்தாக்கள் ஆத்தாக்களால் உருவாக்கப்பட்டது. இருந்தாலும், தாங்கள் அவசர அவசியமும் கருதி போர்க்கால நடவடிக்கை போல் பக்கத்திற்கு 40 காசு என்ற வீதத்தில் பல Xerox நகல்கள் எடுத்தாலும் சரி, அல்லது ஏதேனும் அலுவலகங்களில் உள்ள கையெழுத்து நகலெடுக்கும் இயந்திரத்தை (Cyclostyle Machine)ப் பயன்படுத்தினாலும் சரி, அல்லது யாரேனும் சில ஆட்களை அமர்த்தி நிறைய கையெழுத்து நகல்களை தயாரித்து அனுப்பினாலும் சரி; தங்களின் மூலம் இந்த அஞ்சல் மண்டலத்

தலைமையகங்களுக்கு அனுப்பப்பட்டு இயக்கச் செயல்வீரர்களிடம் பரவிடல் வேண்டும்.

5) தாங்கள் ஆதனக்கோட்டை சென்று குறி கேட்டபோது; வீரமாகாளி இருந்த இடத்திற்கு அங்குள்ள குறிகாரர் "யாரோ வீட்டுக்கு விலக்கான பெண் ஆத்தாள் அருகே வந்ததால்தான் நாகம் வந்து துரத்தியது" என்று கூறியதாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி நாகம் வருவதென்றால்?!; அந்த நாகம் ஏன் அன்றைக்கே அந்த வீட்டுக்கு விலக்கான பெண்ணை துரத்தவில்லை? அதாவது நண்பரே! அவர்கள் கூறியது போல் உண்மையிலேயே வீரமாகாளிக்கு வீட்டுக்கு விலக்கான பெண்ணின் மீது கோபம் என்றால் ஏன் அந்தப் பெண்ணைக் கண்டிக்க வில்லை?; வீரமாகாளி ஒரு தவறும் செய்யாத தங்கள் மனைவியை ஏன் நாகமாக மாறித் துரத்த வேண்டும்? இதில் என்ன நீதி இருக்கிறது? நேர்மை இருக்கிறது? தெய்வீகத் தன்மை இருக்கிறது? தாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதாவது, நாகம் வந்ததற்காக தங்களுக்குக் கூறப்பட்ட விளக்கம் பொய்யானது, தவறானது, மூடநம்பிக்கைக்குரியது ... என்ற முடிவை பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறியான சீவநெறி எனும் இந்துமதம் வழங்குகிறது.

6) பதினெண்சித்தர்களின் நெறிப்படி தங்கள் வீட்டிலுள்ள வீரமாகாளி ஆதனக் கோட்டையிலிருந்து வந்திருக்குமேயானால்! அது சுமார் 20 முதல் 40 வயதிற்குள்தான் இருக்கும். மாநிறம், நடுத்தரமான பருமன், 5¼ அடி உயரமிருக்கலாம். காடுகளிலும், கழனிகளிலும் கடுமையாக உழைத்துக் கட்டுடல், வேளிர் குலத்தைச் சேர்ந்த பெண். போர்க்காலத்தில் வீர மரணமடைந்து தெய்வநிலை பெற்றவள்! தற்காலத்திய ஆதனக்கோட்டை வட்டார மக்களின் (எல்லா வகையான மக்களின்) குலதெய்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவள். அரசகுடும்பம் என்பதால் இறைச்சியுணவை விருப்பமாக உண்பவள். குருதிப் பலியை விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியவள். குடும்பத்தில்

எல்லா வகையான நெளிவு சுழிவுகளைத் தெரிந்தவள், புரிந்தவள். இவற்றுக்கெல்லாம் மேலாக இவள் ஐம்புலன்களும் காண உடலோடு காணக்கூடிய இறவாயாக்கைச் சித்தி பெற்றவள். எனவே, கட்டாயமாக இவள் மாதாமாதம் வீட்டு விலக்கு ஆவது உண்டு. இப்படிப்பட்ட இவள், வீட்டுக்கு விலக்காகக் கூடிய இன்னொரு பெண்ணை தீட்டு என்று எப்படிக் கூற முடியும்?

மேலும், மெய்யான இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரிய வாசகப்படி, **“பெண்களின் இயற்கை நிலைகள், சாவு, பிறப்பு, ... முதலிய எதுவுமே தீட்டு ஆகாது, அருளுலகத்திற்கு விரோதமாகாது. பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்தான் தங்களின் பொய்யான ஹிந்துமதத்தால் இவையெல்லாம் தீட்டு என்ற மடமையை வளர்த்து விட்டார்கள். இந்த மூடநம்பிக்கைகள், கண்மூடிப் பழக்க வழக்கங்கள் மண்மூடிப் போக வேண்டும் ....”** (இது பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் குருபாரம்பரிய வாசகம்) என்று வன்மையாகக் கண்டிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் நோக்கும் போது தங்களுக்கு ஆதனக்கோட்டையில் நாகம் வந்ததற்காகக் கூறப்பட்ட விளக்கம் சரியானதல்ல.

7) தங்களின் அஞ்சலில், “தாய் குளுந்தாளம்மன் துணையோடு கலசப் பூசை துவக்கியுள்ளேன். **தாய் வீரமாகாளி சித்தி முடிந்த பிறகு மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவனாக என் பணியை தொடர்வேன்**. சித்தர் மகன் ந.கலியமூர்த்தி” என்ற வாசகங்கள் தங்களால் எழுதப்பட்டிருக்கின்றன. இதைப் படித்த பிறகு உங்களைப் பற்றி என்ன நினைப்பது என்றே தெரியவில்லை. தாங்கள் இளம் வயதில் நிறைய மந்திரவாதி மாயாவிக் கதைகளையும், பிருமணர்களின் ஆரிய மாயைகள் மிகுந்த புராண இதிகாசக் கதைகளையும், கிராம

வழக்காற்றில் சொல்லக் கூடிய தேவதைக் கதைகளையும், பேய் பிசாசுக் கதைகளையும், மந்திறவாதிக் கதைகளையும் படித்தும், கேட்டும் பசுமையாக தங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். இல்லையென்றால் இப்படிக் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் உள்ள விளையாட்டுப் பிள்ளை போல், "வீரமாகாளி சித்தி பெற்ற பின் செயல்படுகிறேன்" என்று சொல்லியிருப்பீர்களா???!!!

8) நண்பரே! **'சித்தி'** என்றால் என்னவென்று அருளுலகத்தில் யாராவது விளக்கம் சொல்லிக் கேட்டதுண்டா? 'பத்தி', 'சத்தி', 'சித்தி', 'முத்தி' என்ற நான்கு அருளுலகத்தில் இருப்பது தங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொன்றுக்கும் பொருள் தெரியுமா? இவை பற்றிய ஆரியக் கற்பனைகள் என்னென்ன? என்பது தங்களுக்குத் தெரியுமா? இவை போல் 'பத்தியாளர்கள்', 'சத்தியாளர்கள்', 'சித்தியாளர்கள்', 'முத்தியாளர்கள்' எனப்படும் நான்கு வகை அருளாளர்கள் பற்றித் தங்களுக்குத் தெரியுமா? ... தங்களுக்கு மட்டுமல்ல, ஏறத்தாழ 'இந்துக்கள்' என்று கூறிக் கொள்ளும் யாருக்குமே தெரியாது என்றுதான் கூற வேண்டும். அவ்வளவு ஏன்? இன்றுள்ள இந்துமதத்தின் தலைவர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், ஆச்சாரியார்கள், ... எனப்படுபவர்களில் ஏறத்தாழ எவருக்குமே மேற்படி நான்கு வகையினரைப் பற்றி முறையாகவும் தெரியாது, நிறைவாகவும் தெரியாது.

ஏனென்றால் அந்த அளவுக்கு நமது தாய்த் திருநாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள இந்துக்கள் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் திறமையாலும், சூழ்ச்சியாலும், சமசுக்கிருத மொழி இலக்கியங்களின் ஆபாசக் கற்பனைகளாலும், வேதமதத்தின் பொருளற்ற பயனற்ற சாத்திர சம்பிறதாயச் சடங்குகளாலும், எவ்வித சத்தியுமற்ற மந்திரங்களாலும், பூசைகளாலும், வேதங்களாலும் உருவாக்கப்பட்ட பொய்யான, போலியான *ஹிந்துமதத்தையே* இந்துமதமென நம்பி வருகிறார்கள். எனவேதான், கி.மு. 72லேயே

**மெய்யான இந்துமதமும்** *பொய்யான ஹிந்துமதமும்* என்ற தலைப்பில் உரைநடை நூல்களும், கவிதைகளும் தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களால் தொடர்ந்து எழுதப்பட்டு வந்திருக்கிறது. அவரைத் தொடர்ந்து நாற்பத்தெட்டு (48) வகைச் சித்தர்களாலும், நாற்பத்தெட்டு (48) வகை அருளாளர்களாலும், நாற்பத்தெட்டு (48) வகை அருட்பட்டத்தவர்களாலும், பதின்மூன்று (13) வகைச் சித்தியாளர்களாலும் தொடர்ந்து எழுதியும், பேசியும்; <u>தமிழர்களின் **மெய்யான இந்துமதம்** வேறு, பிருமணர்களின் *பொய்யான ஹிந்துமதம்* வேறு என்று நிலைநாட்டிட முயன்று வருகிறார்கள்</u>.

ஆனால், பிறமண்ணினரான பிருமணர்களுக்கு மிக எளிதில் தமிழர்களிலேயே கூலிகளும், கங்காணிகளும், எடுபிடிகளும், பிருமண அடிமைகளும், பிருமண மோகிகளும், பிருமண மத வெறியர்களும் நிறைய கிடைத்துத் தமிழின மொழி மதம் என்ற மூன்றுக்கும் எதிராகத் துரோகங்களும், விரோதங்களும் செய்து வந்திட்டதால், பிருமணர்கள் மிக எளிதாக தங்களின் *பொய்யான ஹிந்துமதத்தை* நிலைநாட்டிக் கொண்டு வருகிறார்கள், நிலைநாட்டிக் கொண்டு விட்டார்கள்.

அதாவது, இவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவரும், பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களையே மாபெரும் தோல்விகளுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாக்கி; அவரே மனமுடைந்து நம்பிக்கையிழந்து தான் கட்டிய பெரிய கோயிலுக்கும், தான் உருவாக்கிய பிற்காலச் சோழப் பேரரசுக்கும் சாபம் கொடுத்து விட்டு நிலவறைக்குள் செல்லுமாறு செய்து விட்டார்கள். எனவே, அவர் ஏட்டிலும், நாட்டிலும் **மெய்யான இந்துமதம்** பற்றி நிலைநாட்டிச் சென்ற இந்துமதம் பற்றிய பேருண்மைகள் அனைத்தும் இருந்த

இடம் தெரியாமல் போய்விட்டன! இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன!! இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன!!!

அவற்றையெல்லாம் இன்று தோன்றியுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான நமது குருதேவர் ஆழ நீள நினைத்துத்தான் அமைதியோடும், அடக்கத்தோடும், நிதானத்தோடும், பொறுப்போடும், பொறுமையோடும், இலைமறை காயாக இருந்து செயல்பட்டே; தமிழர்களுக்குத் தங்கள் **மெய்யான இந்துமதத்**தை அனுபவப்பூர்வமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஏட்டறிவினையும், பட்டறிவினையும் பல்வேறு நிலைகளில், பல்வேறு வகைகளில் வழங்கி வருகிறார். அதாவது, இதுவரை நூற்றுக்கணக்கில் நூல்களும், ஆயிரக்கணக்கில் கட்டுரைகளும், பல்லாயிரக்கணக்கில் அஞ்சல்களும் எழுதி ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும், கணக்கற்ற சுடுகாட்டு புதைகாட்டு அருட்கோட்டங்களும், தேவையான அளவு வேள்விக்கூடங்களும், நாட்டில் கருகுலம் குருகுலம் தருகுலம் திருகுலம் முதலியவைகளும், ... உருவாக்கி அருட் பயிரினங்களும், உயிரினங்களும் வளவளர்ச்சியோடும், வலிமைச் செழிச்சியோடும் வளர்ந்தோங்கச் செய்துள்ளார்.

இருந்தாலும், தமிழர்கள் தமிழினத்துக்கே உரிய அடிமைப் புத்தியால் குருதேவரால் உருவானவர்களில் பெரும்பாலானோர் குருதேவர்தான் தமிழினக் குருபீடம், தமிழினத் தலைவர், தமிழின ஆச்சாறியார், தமிழர்களை விடுவிக்க வந்த அருளாளர், தமிழரின் சமய சமுதாய விடுதலைக்காகப் பாடுபடும் மெய்யான புரட்சித் தலைவர், ... என்ற பேருண்மைகளை உணர முடியாதவர்களாகவும், உணர்ந்தாலும் ஒப்புக் கொள்ள முடியாதவர்களாகவும் போய் விட்டார்கள். அதாவது, தொடர்ந்து தமிழர்களிலேயே தமிழினத் துரோகிகளும், தமிழ்மொழித் துரோகிகளும், தமிழர் மதத் துரோகிகளும் மறைவாகச் சதி வேலைகளையும், சூழ்ச்சி வேலைகளையும் செய்து குருதேவரின் தமிழின

மொழி மத விடுதலை இயக்கத்தைத் தோல்வியுறச் செய்து விட்டார்கள். குருதேவரின் அருட்பணி விரிவாக்கத் திட்டங்கள் பொதுமக்களுக்கு முறையாகவும், முழுமையாகவும் பயனளிக்க முடியாமல் சிதைத்துச் சீரழித்து விட்டார்கள். குருதேவரின் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைப் பொருளற்றதாகவும், பயனற்றதாகவும், செயலற்றதாகவும் விளம்பரப்படுத்தி அதன் வளர்ச்சிக்கு பேரூறு விளைவித்து விட்டார்கள்; குருதேவரின் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை தமிழகத்தின் படித்த கூட்டத்தார்கள் கூடப் புரிந்து கொள்ள முடியாதவாறு செய்து விட்டார்கள். குருதேவர் வழங்கிய பதினெண்சித்தர்களுடைய சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம் எனும் உலக மானுடவியல் மேம்பாட்டுச் சித்தாந்தத்தைப் பொதுவாக பிற மாநிலத்தவர்களோ, வெளிநாட்டவர்களோ அல்லது தமிழ் படித்த புலவர் பெருமக்களோ தெரிந்து கொள்ளவே முடியாமல் செய்து விட்டார்கள். ... இப்படியெல்லாம் குருதேவரால் உருவாக்கப்பட்டவர்களே குருதேவருக்கு எதிராகச் செயல்பட்டும் கூட நமது குருதேவர் அயர்ச்சியோ, தளர்ச்சியோ அடையாமல் தொடர்ந்து தமது முயற்சியைச் செய்துதான் வருகிறார்! செய்துதான் வருகிறார்!! செய்துதான் வருகிறார்!!!

9) நண்ப! நமது குருதேவர் பருந்து போல் வானத்தின் உச்சியில் பறக்கவும் செய்வார். ஊர்க்குருவி போல் தெருத் தெருவாகவும், வீடு வீடாகவும் புகுந்தும் செல்வார்; அவர் தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தமிழின மொழி மத விடுதலைக்குரிய தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் விதைத்து விதைத்து பயிராக்கிப் பார்க்கிறார்.... ஆனால்! ஆனால்! ஆனால்! ... விளைச்சலின் அறுவடைதான் தேவையான அளவு கூட இன்னும் கிடைக்கவில்லை. இந்த நேரத்திலேதான் நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள். உங்களை முறையாகவும், நிறைவாகவும் பயன்படுத்திக் கொள்ள எண்ணுகிறார் குருதேவர். எனவேதான், தங்களுக்கு இந்த நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது. அதாவது, உங்களைப் போன்று அருளுலகம் என்றால் என்ன என்று

தெரியாத பத்தர்கள்தான் தமிழகத்தில் நிறைய உள்ளனர். அதாவது, நீங்கள் உங்களுடைய ஆடம்பரமான, ஆரவாரமான, அவசர அவசியமான பூசைகளாலும், சடங்குகளாலும், ... சாத்திற சம்பிறதாயங்களாலும், ... மிகமிக எளிதில் நீங்கள் வணங்குகின்ற கடவுள்களும், தெய்வங்களும், தேவர்களும், தேவிகளும், தேவதைகளும், ஆண்டவர்களும், பட்டவர்களும், இறைவர்களும், இயவுள்களும், எல்லாக்களும், ... உங்களுக்கு விரைவில் சித்தியாகி விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்! நம்புகிறீர்கள்! இது எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம், கேலிக் கூத்து, ஏமாளி நிலை, கோமாளிப் போக்கு, சிறுபிள்ளைத்தனமான கருத்து, காட்டுமிராண்டித்தனமான கற்பனை, கண்மூடித்தனமான மூடநம்பிக்கை, ......???!!!

10) நண்பரே! 'ஒரு தெய்வத்தை, ஒரு சாதாரண தேவதையைச் சித்தி செய்வது என்பது கடைக்குப் போய் காசு கொடுத்து கத்தரிக்காய் வாங்குவது போன்றது அன்று'. அதாவது, ஒரு சித்தி பெறுவதற்கு எத்தனையோ பிறப்புக்கள் எடுக்க வேண்டும். முதலில் உங்களுக்கு கருவழிச் சித்தி வேண்டும்; பிறகு தருவழிச் சித்தி வேண்டும்; பிறகு திருவழிச் சித்தி வேண்டும்; இவற்றின் பயனால் தகுந்த குருவழிச் சித்தி கிடைக்க வேண்டும். அதாவது, "முதலில் குறிப்பிட்ட மூன்று சித்திகள் கிடைத்தாலும், குருவழிச் சித்தி கிடைத்தால்தான் கிடைத்த சித்திகளை **முறையாகவும், நிறைவாகவும், நிலையாகவும்** பயன்படுத்த முடியும்." - ***குருபாரம்பரிய வாசகம்***. (பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி). இக் குருபாரம்பரிய வாசகத்தைப் பலமுறை திருப்பித் திருப்பிப் படிப்பீர்களேயானால்; நீங்கள் வீரமாகாளியை **'சித்தி செய்ய நினைப்பது, மண்ணில் தவழும் குழந்தை; விண்ணில் உலா வரும் வெண்ணிலாவை பிடிக்க முயல்வது போன்றதாகும்'** என்ற பேருண்மை உங்களுக்கே விளங்கிடும்.

11) நண்ப! நீங்கள் மிக எளிதாக குருதேவரிடம் வீரமாகாளியை சித்தி செய்த பிறகு இயக்கத்தில் தீவிரமாகச் செயல்படுவதாக தெரிவித்திருக்கிறீர்கள். அதைப் படித்த பிறகு குருதேவர் புன்முறுவல் பூத்தபடி இருந்தார். அதன்பிறகு, அவர் உங்கள் நிலையை விளக்கிச் சொன்ன உண்மையை உங்களுக்கு அப்படியே தருகிறேன். வருந்த வேண்டாம். இதுவும் குருபாரம்பரிய வாசகம்தான். அதாவது, பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான்; இம்மண்ணுலகிலேயே இன்றுடன் 43,73,090 ஆண்டுகளின் உலக மனித இன வரலாற்றை மிகமிகத் தெளிவாக காலக்கணக்கீட்டு அடிப்படையில் (With a Chronological approach) எளிய இனிய தமிழில் விளக்கி எழுதியிருக்கிறார்கள். அதுவும், குருபாரம்பரியம் (The Religious History), இலக்கிய பாரம்பரியம் (The History of Language, Literature and the Social History), அரச பாரம்பரியம் (The Political History) என்று முப்பெரும் வரலாற்றுப் பெருநூல்களைத் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார்கள். இதுவே, இவர்கள் இம் மண்ணுலகில் அனைத்து வகையான அறிவியல் துறைகளுக்கும் வழங்கும் மிகப்பெரிய சாதனை, அருட்கொடை (The Intellectual contribution of the Pathinen Siddhars to all the departments of Knowledge and Wisdom are Immortal and Marvellous) ஆகும்.

இவையல்லாமல் இந்த பதினெண்சித்தர் பீடாதிபதிகள் கருவாக்கு, கருவாக்கியம், கருவாசகம், குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், தருவாக்கு, தருவாக்கியம், தருவாசகம், திருவாக்கு, திருவாக்கியம், திருவாசகம், அருள்வாக்கு, அருள்வாக்கியம், அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாக்கியம், மருள்வாசகம் எனும் பதினெட்டு வகையான இலக்கியங்களை உருவாக்கி அருளுலகின் அனைத்து வகையான தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், குறிக்கோள்களையும், மறைகளையும், முறைகளையும், நெறிகளையும், வேதங்களையும், சித்தங்களையும், நாதங்களையும்,

போதங்களையும், ஓதங்களையும், மூன்றுவகைப் பட்ட அத்திற, சாத்திற, சூத்திற, தோத்திற, நேத்திற, வேத்திறங்களையும் (3 x 6 = 18 ஆகப் பதினெட்டு) ... அழகான இனிமையான சுவையான இலக்கியங்களாகக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால்... ஆனால்... ஆனால்...!!! தமிழைத் தாய்மொழியாக உடைய தமிழர்கள் மட்டும் பல்வேறு காரண காரியங்களாலும், பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரின் சூழ்ச்சிகளாலும், தங்களுடைய **தாய்மொழியைப் பற்றியே** நினைத்துப் பார்க்க மறுக்கிறார்கள்! வெறுக்கிறார்கள்! மறுக்கிறார்கள்!! வெறுக்கிறார்கள்!! மறுக்கிறார்கள்!!! வெறுக்கிறார்கள்!!! இதுதான் நண்பரே கொடுமை! கொடுமை!! கொடுமை!!! கொடுமையிலும் கொடுமை! அதாவது ஒரு சில விவரம் தெரிந்த தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும், மேதைகளும், கலைஞர்களும், கவிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் கூட அன்னியர்கள் தரும் பட்டம், பதவிக்காகவும், அவர்கள் தரும் காசு பணத்துக்காகவும்; தாங்கள் அறிந்த, அறிகின்ற, அறியக் கூடிய தமிழ் பற்றிய அனைத்து வகையான பேருண்மைகளையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டுப் போய்விடுகிறார்கள் அல்லது அன்னியர்களுக்குக் காணிக்கையாக்கி விட்டுப் போய்விடுகிறார்கள்.

**எனவேதான்... எனவேதான்... எனவேதான்... 'தமிழின மொழி மத விடுதலை இயக்கம் என்ற ஒன்று கி.மு.72இல் தோன்றியும் கூட...!!!??? ..!!!??? ..!!!??? இப்பொழுது கி.பி.1972ஆம் ஆண்டு கடந்தும் கூட...!!!??? ...!!!??? ...!!!??? இன்னும் ஏட்டளவில் மட்டுமே இருக்கின்ற ஓர் இயக்கமாகத்தான் இருந்திடுகின்றது. இந்த இழிநிலை, பழிநிலை மாறி என்றைக்குத் தமிழின மொழி மத விடுதலை இயக்கம் நாட்டு நடப்பில் உயிர் பெற்று உலா வரப் போகிறது?! வரப்போகிறது?! வரப்போகிறது?!'** இதுபற்றி சிந்திக்கத்தான் உங்களைப் போன்ற இளைஞர்களை அழைக்கிறார் குருதேவர்.

12) தங்களுக்குத் தமிழினத்தின் மீதும், தமிழ்மொழியின் மீதும், தமிழர் மதத்தின் மீதும் மெய்யாகவே பற்றும், பாசமும் இருக்குமேயானுல்; இவை மூன்றும் மெய்யாகவே விடுதலே பெற்று உரிமை மிக்கப் பெருமை வாழ்வு வாழப் பாடுபட வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! அதற்கு; இம்மூன்றுக்கும் மூலமாக, ஆதியாக, தாயாக, கருவாக, உயிரோட்டமாக விளங்கும் தத்துவ நாயகங்களான பதினெண்சித்தர்களின் கொள்கைகளும், குறிக்கோள்களும், செயல்திட்டங்களும் வெற்றி பெற உழைத்திடுங்கள்.

தமிழ்மொழியின் அருளாற்றலேயும், இந்துமதத்தின் அரிய, பெரிய, சாதனேத் திறங்களேயும் உலகறியச் செய்வதற்காக ஆங்காங்கே கிராமம் கிராமமாக, ஊர் ஊராக, நகரம் நகரமாக, **"ஓரே ஒரு சித்தரடியானேயாவது உருவாக்கி"** அவனுக்குரிய பட்டா நிலத்தில் (சொந்த இடத்தில்; ஏனெனில் யாரும் தகராறு செய்யாமல் இருக்க, வராமலிருக்க) மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றி; அந்தச் சித்தரடியான் உயரத்துக்கு ஒரு திரிசூலம் நட்டு அதன் முன்னிலேயில் ஓர் அகல் விளக்கு மாடம் கட்டி; அதற்கருகில் ஒரு யாகசாலே (**அந்த இடத்தில் வந்து அருள்புரியத் தயாராக இருக்கக் கூடிய கடவுளின் தன்மைக்கேற்ப வட்டம், சதுரம், முக்கோணம், ஐங்கோணம், அறுகோணம், எண்கோணம், கண்வடிவம், ... என்று ஏதேனும் ஒரு வடிவ அமைப்பில் அல்லது பல வடிவ அமைப்பில் தேவைக்கேற்ப யாகசாலே அமைக்கப்படல் வேண்டும்.**) அமைத்து வாரத்தில் ஒரு நாளாவது (எத்தனே நாட்களாவது யாகம் செய்யலாம்) தொடர்ந்து யாகம் செய்யும் ஏற்பாட்டை உண்டாக்கி, அங்கு வரக்கூடிய மக்களுக்குப் புரியக் கூடிய தமிழ்மொழியில் அவர்களும் சேர்ந்து சொல்லும்படியான **'அருளூறு பூசாமொழி வாசகங்களே'** இனிமையாக முறைப்படி ஓதி நோயாளிகளும், பேயாளிகளும் நலமடையச் செய்திடல் வேண்டும். அத்துடன் நாள், கோள், விண்மீன், இராசி, மந்திரவாதி .... முதலியவைகளால் விளேயக்

கூடிய எல்லாவகையான பாதிப்புக்களையும் நலப்படுத்திடல் வேண்டும். அதற்காக அருளை திருநீறு, குங்குமம், மஞ்சள், முடிகயிறு, தாயத்து, இயந்திரங்கள், சக்கரங்கள் ... முதலியவைகளில் வழங்கி மக்களுக்குக் குறிப்பிட்ட சில வாரங்களுக்குள் முழுமையான நலம் விளைவிக்க வேண்டும்.

இவற்றால் தமிழ்மொழி; தமிழ்மொழியினால் விளையும் அருளாற்றல்; தமிழ்மொழியின் அருளாளர்கள்; தமிழ்மொழியின் அருளாளர்கள் இயற்றிய இலக்கியங்கள்; தமிழரின் அருளுலக வரலாறுகள்; தமிழர் கூறும் அருளார்ந்த 'தனிமனித வாழ்வு', 'குடும்ப வாழ்வு', 'சமுதாய வாழ்வு', 'அரசியல் வாழ்வு' பற்றிய சிந்தனைகள்; தமிழரின் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சித்தாந்தம்!; தமிழரின் இன விடுதலைக் கொள்கை!; தமிழரின் மொழி விடுதலைக் கொள்கை!; தமிழரின் மத விடுதலைக் கொள்கை!; தமிழரின் அருளாட்சித் தத்துவம்!; தமிழரின் அருட்கலைகள்!; தமிழரின் அருள்சார்ந்த ஞானங்கள், விஞ்ஞானங்கள், அகஞானங்கள், புறஞானங்கள், மெய்ஞ்ஞானங்கள் ... முதலியவை பற்றிய சிந்தனைகளை, ஆர்வங்களைத் தமிழர்களிடம் தேவையான அளவு உருவாக்கி விட்டால் போதும்! போதும்! போதும்! அவற்றின் மூலம் தமிழரின் தன்மான உணர்ச்சி! இனமான உணர்ச்சி! மொழிமான உணர்ச்சி! ... முதலியவை எல்லாம் விழிச்சி பெற்று, எழிச்சி பெற்று, செழிச்சிக்குரிய அருளாட்சி அமையத் தேவையான புரட்சிப் பணிகளை உருவாக்கிடும்! உருவாக்கிடும்! உருவாக்கிடும்! இவை பற்றிச் சிந்தியுங்கள்.

13) நண்ப! தீமைகளை ஒழிக்க ஊழித்தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் திரிபுரம் எரித்த அவிர்சடைக் கடவுளான <u>சிவபெருமான் திருநடனமிடும் ஊர் தோறுமுள்ள சுடுகாடுகளில்</u> திரிசூலம் நட்டு, விளக்கு மாடம் கட்டி, யாகசாலை அமைத்து; வாரம் தோறும் யாகமும், முழுநிலவு நாட்களில் இரவிலும், அமாவாசை நாட்களில்

பகலிலும் யாகபூசை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும். அப்பொழுதுதான் அந்தந்த வட்டாரத்திலுள்ள கடுமையான பாதிப்புக்களேயும்; ஏழை, எளிய, பாமர, பாட்டாளி மக்களின் பாதிப்புக்களேயும் நலப்படுத்திட முடியும்.

அதாவது, நாம் சுடுகாடுகளில் அமைக்கும் அருட்கோட்டங்களின் மூலமாகத்தான் சாதி மத வெறிகளேயும், ஏற்றத்தாழ்வுகளேயும், மாயைகளேயும் முழுமையாக வென்றிட முடியும்! வென்றிட முடியும்!! வென்றிட முடியும்!!! அதன்மூலம்தான் பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறியான சீவநெறி எனும் இந்துமதம்தான் இம் மண்ணுலக மதங்களுக்கெல்லாம் மூலமானது, முதலானது, கருவானது, ஆரம்பமானது என்ற பேருண்மை தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிடும். அதாவது, நண்பரே! தமிழகத்தில் மலரக் கூடிய அருளாட்சிதான் படிப்படியாகத் தென்னிந்தியா, இந்தியத் துணேக் கண்டம், ஆசியா, ... என்று பரவி உலகம் முழுதும் பரவ வேண்டும்.

14) நண்பரே! **<u>“நம்மை யார் ஆளுகிருர்கள் என்பதைப் பற்றிக் கவலேயில்லே?! நம்மை எது ஆளுகிறது என்பதைப் பற்றித்தான் கவலேப்பட வேண்டும்”</u>** என்ற இந்த வாசகம்தான் தமிழருடைய அரசியல் தத்துவத்தையும், சித்தாந்தத்தையும், இதை உருவாக்குபவர்களின் வரலாறுகளேயும் தொகுத்துக் கூறும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் அரசபாரம்பரியம் (The Political History) என்ற தொடர் வரலாற்று நூலின் ஆரம்பத்தில் இருக்கிறது. அதாவது நம்மை எந்தத் தத்துவம் ஆளுகிறது அல்லது நாம் எந்தச் சித்தாந்தப்படி ஆளப்படுகிருேம் என்பதைப் புரிந்துதான் அல்லது புரிய முயன்றுதான் வாழ வேண்டும் என்ற அறிவுரையையே வழங்குகிருர்கள் பதினெண்சித்தர்கள். இதன்படிதான் நமது குருதேவர் நமது தாயக மக்களே அருளாட்சிக்குத் தயாராக்குகிருர் என்பதைத்

தெரிந்து செயல்பட வாருங்கள். நமது குருதேவர் தத்துவ நாயகமாகவும், சித்தாந்த நாயகமாகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், பரபிறம்மமாகவும், நிறையக்ஞராகவும், தமிழின ஆச்சாறியாராகவும், தமிழினக் குருபீடமாகவும், இந்துமதத் தந்தையாகவும், இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவராகவும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், ஞானசபையின் நல்ல தலைவராகவும் வாழ்ந்து செயல்படுவதைப் புரிந்து செயல்பட வாருங்கள்.

"தலைவனை அறிந்தால் தன்னை அறியலாம்,
தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்"

**- பதினெண்சித்தர் வாக்கியம்.**

## பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம், தலைமைப்பீடம்.

**27-7-89 காலை 8:15மணிக்கு நிறைவு செய்யப்பட்டது.**

<u>நகல் எழுதியவர்:-</u>

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம்,
பாண்டியப் பெருமண்டல மாதண்ட நாயகங்களுள் ஒருவர்,
அருட்சேனைத் தளபதி, சித்தர் மகன், சித்தர் உரிமைச் சுற்றம்,
சித்தரடியான் M.C.இராமன்,
248K, இரயில்வே காலனி, மதுரை - 625010;
நாள்: 4.8.89, வெள்ளி.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு M.C. இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

# உயிர்ப்புச் செய்யப்பட்ட கோயிலுக்கான பூசைமுறைகள்

30.6.89,

தலைமைப்பீடம்.

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் K. சமுத்திரவள்ளி (வடக்குத் தெரு, விரகாலூர் Post, திருச்சி மாவட்டம் - PIN: 621722) சமூகத்திற்கு;

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் விடுக்கும் செயல்நலம் பாராட்டுத் திருவோலை.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் நலமாகட்டும்!

2) அன்பு மகளே! உமது அஞ்சல் கிடைத்தது (26/6/89 தேதியிட்ட கவர் அஞ்சல்). உன் அஞ்சலின் வாசகங்கள் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தன. உன்னுடைய ஆர்வமும் இப்போது இருப்பது போல மென்மேலும் சிறந்து ஓங்கட்டும். நீ, சித்தர் நெறியின் தடாகத்தில் புதிதாகப் பூத்துள்ள செந்தாமரை மலர். எனவே, உன்னை முழுமையாகவும், முறையாகவும், நிறைவாகவும் சித்தர் நெறிக்கே அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராகிக் கொள்.

ஏறத்தாழ அருளுலகத்தவர்கள் அனைவருமே உன்னை முழுமையாக விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நீ, நமது அருளுலக வரலாறுகளையும், வாழ்வியல் நடைமுறைகளையும், சட்டதிட்டக்

கட்டுப்பாடுகளேயும், பழக்க வழக்க நம்பிக்கைகளேயும், பிற ஒழுகலாறுகளேயும், மரபுவழிச் செய்திகளேயும், செவிவழியாக வாழ்ந்து வரும் இரகசிய முறைகளேயும் உன்ஞல் முடிந்தவரை சேகரிக்க முற்படு! முற்படு! முற்படு! இதற்காக இதுவரை வெளிவந்துள்ள குருதேவர் ஏடு, அறிக்கை, புத்தகங்கள், அறிவிக்கைகள், பல்லாயிரக் கணக்கான அஞ்சல்கள், நூற்றுக்கணக்கான கட்டுரைகள், ... முதலியவற்றையெல்லாம் (நினேவுபடுத்தும் வண்ணம்) படித்துத் தெரிந்து கொள்ளவும்; மண்டலத் தலேமை அலுவலகங்களுடனும், தலேமைப் பீடத்துடனும் தொடர்பு கொண்டு பெற்றிட முயற்சி செய்.

**<u>குறிப்பு:-</u>** அதாவது, மண்டலத் தலேமை அலுவலகங்களிலிருந்தும், தலேமைப் பீடத்திலிருந்தும் அவ்வப்போது தேவையான செய்திகள் மொத்தமாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ அனுப்பி வைக்கப்படும். அவற்றைப் படித்துத் தெரிந்து கொள்வதோடு, நீயும் நமது கோப்புக்களேப் பிறரும் படித்துப் புரியும் வண்ணம் நூலகமாகவே செயல்படச் செய்யலாம்.

3) உன்னேப் பொறுத்தவரை, தலேமைப்பீடத்திலிருந்தும், பிற இடங்களிலிருந்தும் உடனுக்குடன் நகல்கள் அனுப்பி வைக்கப்படும். கவலே வேண்டாம். **<u>எனவே, பெண்தானே என்ற தாழ்வு மனப்பான்மை உனக்கு வந்து விடக் கூடாது! பிறருக்கும் வந்து விடக் கூடாது! எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!</u>**

4) நீ எப்பொழுதும் உன்னே தேவி சமயபுரம் மாரியம்மனின் அருள் பெற்றவள், சன்னிதானம் என்ற பூரிப்போடும், பெருமையோடும் நினேவுபடுத்திச் செயல்பட வேண்டும். அதேபோல் உன்னே நீ அருட்கொடை வள்ளல், அண்டபேரண்ட அருதி ஆதிசத்திகள் சன்னிதானம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், பரப்பிறம்மம், நிறை யக்ஞர், குவலய குருபீடம், ஞாஞச்சாரியார், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

அவர்களின் ஏற்புச் செல்வி, செல்வத் திருமகள் என்ற உரிமை உணர்வோடு செயல்பட வேண்டும். இவற்ருல் உன் ஞானத்தந்தை உனக்கு அவ்வப்போது ஏட்டறிவாகவும் (Theoretical Knowledge), பட்டறிவாகவும் (Practical Knowledge), செவிவழிச் செய்தியாகவும் (Hearsay information) வழங்குபவைகளை இரகசியமாகக் காப்பாற்ற வேண்டும். அதாவது உன்னிடமிருந்து ஊசிமுனையளவு செய்திகள் கூட உன் ஞானத்தந்தையின் எழுத்துப் பூர்வமான ஆணையின்றி வெளிப்பட்டு விடக் கூடாது! எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை!

**குறிப்பு**:- இப்படியெல்லாம் உன் ஞானத்தந்தை உனக்கு எச்சரிக்கை கொடுப்பது உன் மீது நம்பிக்கை இல்லாமல் இல்லை.

5) உலகியல் வழக்கில், "பெண்களிடம் இரகசியம் கூறக் கூடாது", "பெண்புத்தி பின்புத்தி", "பெண்ணை நம்பிக் கெட்டவர்களே மிகுதி", "பெண்ணை விடப் பேதமை பிரிதொன்றுமில்லை", ... என்பன போன்ற பழமொழிகளும், மூதுரைகளும் நிறைய இருக்கின்றன. ஆனால், சித்தர் நெறி இவற்றையெல்லாம் ஏற்கவில்லை! ஏற்கவில்லை! ஏற்கவில்லை! ஏற்கவேயில்லை! எனவேதான் சித்தர் நெறிப்படிப் பார்த்தால் பெரும்பாலும் அனைத்து வகையான துறைகளுக்கும் பெண்களையே தலைவியாக நியமித்துள்ளனர். சித்தர்கள் அனைத்துக்கும் வீரமாகச் செயல்பட பராசத்தி, பொருள் வழங்கிடத் திருமகள், கல்வியும் கலையும் வழங்கிடக் கலைமகள், நீர் வழங்கிட மாரியம்மன், நெருப்பு வழங்கிடக் காளியம்மன், மேலே வான்மகள் விண்மகள் ... என்று ஏழு வகைப் பெண்கள், மண்ணுக்கு நிலமகள், ... என்றிப்படி அனைத்தையும் பெண்களிடம் ஒப்படைத்துள்ளனர். எனவே, சித்தர்நெறிச் செல்வியாக, சித்தர் நெறியின் செல்லமகளாக நீ உரிமையோடும், பெருமையோடும், உரிய அடக்கத்தோடும், பெரிய அதிகாரத்தோடும், இரகசியங்களைக் காப்பாற்றும் தரத்தோடும், திறத்தோடும், உரத்தோடும், மறத்தோடும், அறத்தோடும் வாழ வேண்டும்! வளர வேண்டும்!

சிறக்க வேண்டும்! அப்பொழுதுதான் உன்ஞல் அருளாட்சி அமைப்புப் பணிகளில் தலேமை ஏற்றுப் பெரும்பணிகளே செயலாக்கிட முடியும். மேலும், அருட்போரில் ஒரு மாதண்ட நாயகமாக, வீரத்தளபதியாக விளங்கிட முடியும். இவற்றிற்கெல்லாம் மேலாக அமையப் போகும் அருளாட்சியில் குருதேவரின் வாரிசுகளாக உள்ள 13வது, 14வது பீடாதிபதிகளுக்குத் துணேயாக என்றென்றும் நின்று நிலவிட முடியும்.

6) அன்பு மகளே! நீ எந்தச் சோதனேகளேயும் பதட்டமின்றிப் பொறுப்போடும், பொறுமையோடும், நிதானத்தோடும், அமைதியோடும், அடக்கத்தோடும் மனதில் வாங்கிக் கொள்பவளாகவும், சிந்தையில் தாங்கிக் கொள்பவளாகவும் இருக்க வேண்டும். அதாவது எதையும் வாங்கும் மனமும், எதையும் தாங்கும் சிந்தையும் உனக்கு இருக்க வேண்டும். இதுதான் குருதேவரின் வாழ்த்துரை. உனக்கு அனுப்பப்படும் இத் திருவோலேயைப் பலமுறை திரும்பத் திரும்பப் படித்துப் புரிந்து கொள்ள முற்படு! உனக்கும் உன் தங்கைக்கும் மட்டும் படித்துப் புரிந்து கொள்ள அனுப்பப்படுகிறது. எனவே, இவ்வஞ்சலின் கருத்துக்களாகக் கூறுவதை மட்டும் கூறுபவரிடம் கூறு. அஞ்சலேப் பிறரிடம் காட்ட வேண்டாம். கடுமையான எச்சரிக்கை!

7) குருதேவரின் பயணம் வியாழன் இரவு 6/7/89 ஆரம்பிக்கின்றது என்பதை மறவாதே! இதை அனேவர்க்கும் தெரிவித்திடு! பல்வேறு காரணங்களால் காலதாமதமின்றி காண வருகிரூர் குருதேவர். உனக்கு இதுபற்றி இரண்டு மூன்று அஞ்சல்கள் எழுதியும் புரிந்ததாகத் தெரியவில்லே. 6/7/89இல் புறப்பட்டு 7/7/89இல் டால்மியா அல்லது இலால்குடியில் இறங்கி வர எண்ணியுள்ளார். (Dr S.அமிர்தராசு அவர்கள் இலால்குடியில் இறங்கி வரக் கூறி எழுதியுள்ளார். எனவே, அவருடன் கலந்து பேசி விடு. நீ எங்கு இறங்க வேண்டுமெனக் கூறுகிருயோ அதன்படிச் செய்வோம். கவலே வேண்டாம்.)

8) 2/7/89இல் தென்மண்டல நிர்வாகக் குழு நேரில் வருகிறது. தகுந்த விளக்கம் பெறு. D.M. உடன் உள்ளார். எனவே, தயங்க மயங்க வேண்டாம். சித்தரடியான் புள்ளம்பாடி Dr. K.துரைச்சாமி வீட்டில் ஞானக்கொடி ஏற்றியது சரியே! குருதேவர் பெயரைக் கூறி யாரும் பொய் சொல்ல மாட்டார்கள். நிறைய இடங்களில் கொடிகளை ஏற்றிடு. மேலும், குருதேவரின் சுற்றுப்பயண நிகழ்ச்சிக்குப் பின் அவ்வப்போது கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளை முன்னரே தெரிவித்து அனுமதி பெற்றே செயல்படவும்.

9) பொன்ராமன் கணிப்பு கணிக்க இயலாது. சிக்கல்கள் மிகுதி! தண்ணீர் கிடைத்தால்தான் கிடைக்கும். எனவே, குருட்டுத்தனமாகச் செயல்பட வேண்டாம். எச்சரிக்கை! உடனே தெரிவித்திடு. இயக்கத்திற்குக் கெட்ட பெயர் வேண்டாம்.

10) சுப்பையாத் தாத்தாவின் சமாதியில் கொடி ஏற்றத் தயார். ரூ.5000 வரை செலவாகும். முடிந்ததைத் தரவும். சிரமம் வேண்டாம். பொதுவாகச் சமாதியை எழுப்புவதோ அல்லது புத்துயிர்ப்புச் செய்யவோ ரூ.3000 முதல் ரூ.5000 வரை ஆகும். எனவே பகுதி பகுதியாகத் தரட்டும். முன்கூட்டிக் கையில் உள்ள காணிக்கையைத் தரட்டும். துன்பமோ தொல்லையோ வேண்டாம். இவரின் தாத்தா தெய்வமாக மாறலாம். மறுபிறப்பு எடுக்கலாம். என்ன நிலை வேண்டுமானாலும் கிடைக்கும்படிச் செய்யலாம். ஆகவே, அவர் இறக்கும் போது என்ன வயது? அவர் மனைவி பெயர் என்ன? என்ற விவரங்களைத் தெரிவித்தால் நன்று. அல்லது நேரில் கூறலாம். இது தொடர்பாகத் தென்மண்டல நிர்வாகக் குழுவைக் கலந்திடு! உடனே கொடி ஏற்றிடு! தேவையான சக்கரங்களைக் கொண்டு வருவார் குருதேவர்.

மேலும், குருதேவர் வியாபாரி அல்ல! எப்போது வேண்டுமானாலும் காணிக்கை தரலாம். ஏமாற்ற வேண்டாம். சிவன் சொத்து யாரும் செறிமானம் செய்ய இயலாது. சுப்பையாவின் மனநிலை சரியில்லை

என்பதற்கான காரண காரியங்களை குருதேவரே நேரில் ஆராய்ந்து கூறுவார். தேவையெனில் பரிகாரம் செய்யப்படும். கடுமையான பாதிப்பு என்றால் சிறுகச் சிறுக நலமாக்கித் தருவார்.

11) நமது பணியே கோவில்களையும், வழிபாட்டு இடங்களையும் புத்துயிர்ப்புச் செய்வதாகும். மேலும் உங்கள் ஊரில் உள்ள கருப்பர் கோயில் என்பதால் கட்டாயம் செய்து தருவார் குருதேவர். ரூ.108 + ரூ.243 + ரூ.1008 = ரூ.1359 ஆகும். உமது சகோதரர் கண்ணன் வசதி போல் தரட்டும். கோயிலில் உண்டியல் ஒன்றை வைத்து மாதாமாதம் தலைமைப்பீடத்துக்கு அனுப்பட்டும். தவறு செய்ய வேண்டாம். மேலும், உண்டியலைப் பிரிக்காமல் அப்படியே மஞ்சள் துணியால் கட்டி அனுப்பிட வேண்டும். பதினெண்சித்தர் மடம் இதற்காக உள்ளது. இரு உண்டியல்கள் வாங்கி வைக்கவும். குருதேவர் நேரில் வரும்போது மந்திரித்துத் தருவார். ஒன்று வீட்டில் பூசையில் இருக்கும். ஒரு உண்டியல் கோயிலில் வைக்கப்படும். அதை அனுப்பிய பிறகு மறு உண்டியல் வைக்க வேண்டும். பின்னர் உண்டியல் திரும்ப அனுப்பப்படும். குருதேவர் நேரில் வரும்போது உரிய சக்கரங்கள் வழங்குவதோடு பூசை முறையும் சொல்லித் தரப்படும்.

**குறிப்பு:-**

a) உயிர்ப்புச் செய்யப்பட்ட கோயிலில் அன்றாடம் ஒருமுறையாவது குளிப்பாட்டி (கருவறை மூலவரை)ப் பூசை செய்ய வேண்டும். ஊதுபத்திப் புகையுடன் விளக்கேற்ற வேண்டும்.

b) மாதம் ஒருமுறையாவது வளர்பிறை, தேய்பிறை என இரண்டு முறையாவது கோழி, புறா, ஆடு எனப் பலியிட்டுப் பச்சைக் குருதியில் கருவறை மூலவர்க்கு நீராட்டுச் செய்ய வேண்டும். இறைச்சி உணவு படைக்க வேண்டும்.

c) பூசை செய்பவர் சன்னிதான உடை கட்ட வேண்டும். (4 முழ வேட்டி இடுப்பிலும், இடுப்புக் கச்சை 6 முழம், தலைப்பாகை 12 முழம்) கழுத்தில் 48லிருந்து 108 வரை உருத்திராட்ச மாலைகள் (அதாவது 108 மணிகள் வரை) அணிய வேண்டும். மேலும் பூசை நேரத்தில் இந்த விதிமுறைகளின்படி இருந்தே ஆக வேண்டும். மேலும், ஏனைய நேரங்களில் சிவப்பு வேட்டியாவது அணிந்திருந்தால் நல்லது.

d) வாராவாரம் யாகசாலைக்கு வந்து ஒரு செம்பில் மஞ்சள் நீர் நிறைத்து எடுத்துச் சென்று கருவறை மூலவரை நன்னீராட்டுச் செய்ய வேண்டும். இவைகளை எல்லாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். தென் மண்டல நிர்வாகக் குழுவைப் பயன்படுத்தி உடனே கோயிலில் கொடி ஏற்றவும். சேவல் + கோழி பலியிட்டுக் கருவறை மூலவரை முழுக்காட்ட வேண்டும். D.M. இருப்பதால் அவர் துணையுடன் இதைச் செய்யவும்.

12) நீ காணிக்கை சேர்த்துள்ள உண்டியலை அப்படியே மஞ்சள் துணியில் கட்டித் தந்து விடு! மேலும், உடனே 4, 5 உண்டியல் தயார் செய்து இப்போதிருந்தே குலுக்குங்கள். அதையும் குருதேவரிடம் தந்து விடவும். குருதேவர் விரும்பினால் திறப்பார். யாரும் திறந்து பார்க்கக் கூடாது. எச்சரிக்கை!

<u>**குறிப்பு:-**</u>

(a) நீ விரும்பினால் உன் ஞானத்தந்தையை வரவேற்க இரயிலடி வரலாம். விருப்பம் போல் செயல்படு. மேலும், ஞாயிறு அன்று தங்கள் வட்டாரத்தில் எந்த நிகழ்ச்சியும் வேண்டாம். ஏனெனில் மாதாகோயில் வழிபாட்டிற்கு கிறித்தவர்கள் வருவார்கள். ஞாயிறு அன்று ஓயாமெரிச் சுடலைப் பூசையில் உன்னால் கலந்து கொள்ள முடியாவிட்டாலும்; சமயபுரம் மாரியம்மன் கோயில் வழிபாட்டில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும். சனிக்கிழமையன்று மாலையில்

(நீ விரும்பினுல்) திருச்சி வரலாம். உன் விருப்பத்திற்கே குருதேவர் விடுகிருர். எனவே, துணிந்து செயல்படு.

(b) காட்டூர் சித்தரடியான் க. மாரிமுத்து திருமணம் செய்ய அனுமதி கேட்டு குருதேவரும் சம்மதம் தெரிவித்துள்ளார். ஏனெனில், அவர் தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்பதால், வட்டார அளவில் சாதிப் பிறச்சினை ஏதும் வந்து விடக் கூடாது. சித்தர்களுக்கும், நமது இயக்கத்தவர்களுக்கும் சாதி, மத, மொழி, இன, ... வேறுபாடுகள் எப்போதும் இல்லை! புரிக! புரிய வைத்திடுக!

**தலைமைப்பீடம்,**
**3/7/89.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதி நகலாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்பதைக் கண்டறிய முடியவில்லை.//**

# குருவாசகம்

**“சாத்திறங்கள் கற்றவரும், கோத்திறத்தை நம்புவது கண்டு பிறந்த ஆத்திறமே; இத்திறத்தார் எத்தரத்தாராயினும் தீத்திறத்தாரே என்று முடிவு கட்டிட நேரிட்டிட்டது. இம்மண்ணுலகில் எல்லா வளங்களும் மிகுந்திருக்கும் திருநாடே தமிழ்நாடு. இத்தமிழ்நாட்டு மக்களே ஒற்றுமை அற்று வாழ நேரிட்டு விட்டது என்பதைக் கண்ணுறும் போது இதற்குக் காரணமான தீத்திறத்தாரை வித்தின்றி அழித்திட முனைவது தவிர வேறு வழியில்லை. இன்று இராசராசனின் மணிமுடியும், அணிவாளும் தீத்திறத்தாரைக் காக்கலாம். நாளை சாத்திறமும் தோத்திறமும் ஒருங்கு கற்றவர் கொதித்தெழுந்தால் இத் தீத்திறத்தாரோடு கோத்திற நம்பிக்கை கொண்ட குருடர்களும் அழித்தொழிக்கப்படுவதை எது தடுக்கும்? எவர் தடுப்பர்?”**

[இக்குருவாசகம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரர் அவர்களுடையது. இவர், தமிழினத்தின் இலக்கிய, கலை, சமய, சமுதாய, அரசியல் ... வரலாறுகள் அனைத்தையும் காலவரையறைக்கேற்ப முறைப்படுத்தி முழுமைப்படுத்தியவர். மிகச் சிறந்த பகுத்தறிவுவாதி, சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, பேரறிஞர், அரசியல் வித்தகர், வரலாற்றுப் பேராசிரியர், கலைஞர், சுவைஞர். இவர், அளப்பரிய தமிழ்மொழிப் பற்று, தமிழினப் பற்று, தமிழ்நாட்டுப் பற்று கொண்டவர். அதனால், ஆரியர்களைக் கடுமையாகக் கண்டித்தவர்; தண்டிக்க முற்பட்டவர். இவரது குருவாசகம் தனித்தன்மை பெற்றவை. தமிழினத்தைக் காக்க வேண்டுமென்ற பேரார்வத்தாலேயே இவர் ஆரியர்களை எதிர்த்திட்டார். இவற்றை இவரது நூல்கள் விளக்குகின்றன. இவர், மானுட உடலுக்குரிய நோய்களுக்கு அரிய மருந்துகள் கண்டவர்; மானுட உணர்வுக்குரிய கலைகள் பல படைத்தவர். எல்லாத் துறைகளுக்கும் முறையான, முழுமையான வரலாறு படைத்தவர். பழமையைப் பாதுகாத்தவர். புதுமையை வளர்த்தவர். இவர் பெருமை விரிக்கிற் பெருகும்.]

//குருதேவர் அவர்கள் வழங்கிய “குருவாசகம் - இரண்டாம் பகுதி” என்ற நூலில் உள்ள ஒரு வாசகம்.//

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

\- குருபாரம்பரிய வாசகம்



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-